
உ

## திருமண்டூர் முருகன்

# பவளமணி மாலை



தொகுப்பு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஓம்

கணேஷாய ஸ்கந்தாய நமக

காப்பு

திருவிலங்கு மால் மருகா சேவல்தனிலேறி
வரு மரன்றன் ஈன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன் பிறந்த யானைமுகவா வுனைத் தொழுவேன்
நின் கதைக்கு நீ என்றும் காப்பு

# திருமண்டூர் முருகன்

## திருப்பவள மணி மாலை

தொகுப்பாசிரியர்
புலவர் நாகமணி விநாயகமூர்த்தி
சேனைக்குடியிருப்பு.

15.08.2011
ஈஸ்வரி வெளியீடு 28

விலை 200



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# என்னுரை

**பெரியோர்களே!**

சின்னக் கதிர்காமம் எனப் போற்றப்படுகின்ற மகிமை பொருந்திய தலம் திருமண்டூர் பதியாகும். இத் திருமுருகனுக்கு எண்ணற்ற புலவர் அறிஞர்கள் எம் பெருமான் மீது பல பாமாலைகள் இயற்றி சூடிப்பாடி திருசண்முகன் தாழ் சரண் அடைந்தார்கள் என அறியலாம்.
இவர்கள் விட்டுச் சென்ற பாடல்கள் முருகன் அடியார்கள் மனத்திருந்து வாய்மூலமாக இசையோடு அலைமோதுவதைக் காணலாம். அப்பெரியோர்கள் வரிசையில் அடியேன் இரு புலவர்களின் பாடல்களைத் இரு அன்பரிடம் கிடைக்கக்கப் பெற்றும் எனது முதலாவது பதிப்பான சரவணபவ சண்முக மாலையில் உள்ள பாடலையும் திருமுருகையன் அகவலையும் சேர்த்து இப்பாடல் தொகுப்பிற்கு திருமண்டூர் முருகன் திருப் பவள மணிமாலை எனத் திருநாாமம் சூட்டியிருக்கின்றேன்.

**அன்பர்களே!**

தற்காலம் வீரமுனை ஏகாம்பரம் கந்தையாஅவர்களின் பாடல்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை தம்பட்டையில் குடிபதியாய் வாழும் சாமித்தம்பி விநாயகமூர்த்தி ஆகிய அன்பரும், தொண்டர் சின்னத்தம்பி, சிவலிங்கம் ஐயா, பாண்டிருப்பு இவர் இயற்றிய பாடலை வாய்மூலமாக சரவணமுத்து அழகையா அண்ணாவியார் பாட அடியேன் எழுதி பிற் சீர் மூன்று பாடலுக்க மணி சேர்த்து நிறைவு செய்திருக்கின்றேன். அமரர் ஏகாம்பரம் ஐயாவின் தொகுப்பான புத்தகம் சுமார் எண் பது ஆண்டுகளுக்கு முற்பட்ட பாடலாகும். அப் பெரியோர் வீரமுனையில் தற்காலம் வாழ்ந்து இறைவனடி சேர்ந்திருக்கலாம். அடியார்களே இப்பெருமக்கள் அமரத்துவம் அடைந்து பல ஆண்டுகள் சென்றாலும் இன்னவர்களையும் நினைவு கூர்ந்து இவர்கள் விட்டுச் சென்ற பாடல்களை தாங்களும் முருகன் புகழ் பாடி அவன் தாள் பணிந்து வாழ்வீராக.
மேலும் எமது இளைய தலைமுறையினர் தெய்வ நம்பிக்கையோடு இப்பாடல்களை காலை,மாலை பராயணம் செய்தும், மற்றும் தனிவழியிலும் காவடிகளுடனும் பாடியும், முருகன் அருள் பெற்று வாழ்வீர்கள் என்றும் எமது பல வெளியீட்டு நூல்களுக்கு ஊக்கம் ஒத்ததாசை தந்ததைப் போன்று இத்தொகுப்பிற்கும் வரவேற்பளிப்பீரென உறுதிகொண்டு உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

**அறுமுகக் கடவுள் பாடல் அன்புடன் உவந்தளித்த**
**பெருமை சேர் இருவரையும் முருகப்பித்தன் யான்**
**மறவேனன்றோ.**

அன்புடன்.
முருகப்பித்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முருகையன் அகவல்

திருச்சிற்றம்பலம்

ஓம் அரகரா முருகா அரிதிரு மருகா
குருபரன் நீயே குவலயம் நீயே
மயின் மிசை வருவாய் மரகத வடிவேல்
சகல சீவ தயாபரப் பொருளே
அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா
அமரரூப காரனே அசுரர்கொலை காரனே
அருணகிரி நாதர்க்கு மிக்கவர நல்குவாய்
ஆதிசிவ சோதியே அரகரசி வாயமே
அண்டபகி ரண்டங்க ளெங்கும்நி றைந்தவா
ஆரணமதானவா காரணம தானவா
கதிரமலை யுறைபவா கந்தகுரு வானவா
அத்திமுக வர்க்கிளைய சித்திரவடி வேலனே
அரகர சிவாயமே பரிபுர பவாயமே
ஈரேழு பதினாலு லோகத்தை யாள்பவா
ஏழையடி யாரையும் ஈடேற்றி யருளுவாய்
இப்புவியி லுன்கிருபை யப்பனே யல்லாது
எவ ருக்கு முதவா ரிதோ
இடையூறு தம்பனம் சாடனம் மாறனம்
என்செய்யு மேவல்க ளெல் லாம்
எரித்துப் பொடித்துநீ றாக்கிவிடுங் கதிர்வேல்
இந்திர வேல் என்றுரைக்கில்
நினைவிலும் கனவிலும் நீரிலும் நூலிலும்
நிற்குமயில் வாகனா அட்சரம தானவா
நேயர்க்கு நேசனே நினைத்ததுகொ டுப்பவா
மாலுக்கு மருகனே மாதர்க்கு இனியனே
வேளைக்கு நல்குவாய் வேதவே தாந்தனே
மூவிரு முகத்தனே ஆறிரு புயத்தனே
பன்னிரு கரத்தனே பங்கய பதத்தனே
உக்கிர வித்தத்தனே உகந்தையி லுறைபவா
ஏழையுரு வாகுவாய் வரமெனக் கருளுவாய்
நித்தமுனைத் துதித்திடும் பரிமளசு கந்தனே
பார்பதிதன் மைந்தனே பரமனார் புத்திரா
பக்தர்க்கு முக்திகளை உன்னிற்ற ளித்தவா
பரகதி கொடுப்பவா பழனிமலை யுறைபவா
செந்தூர் அமர்ந்தவா செங்கடக நகரியில்
திறைகொண்டு மீள்பவா திற்பரா நிற்பரா
அமரரூப காரனே அடியவர்க் கரத்தனே
முடிவினை தொலைத்தவா வருவினையெ தீர்த்தவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவாகி யுருவாகி ஒளியாகி நின்றவா
ஐயனே கையனே மெய்யனே துய்யனே
ஆகனே கோகனே வாகனே மோகனே
அரியவன மீதிலே அனைத்துலக மறியவே
காடுதனில் வள்ளியுடன் கூடிவழி சென்றவா
கருணைகள் கொடுத்தவா கதிரமலை உறைபவா
மருவுதெய் வானையை மணமது முடித்தவா
மயில்வா கனத்தனே அயில்வேல் கரத்தனே
அடியே னுடற்பிணிக ளகலவருள் புரிகுவாய்
சத்துருசங் காரனே நித்தியவிசு வாசனே
நிரந்தரா துரந்தரா நிருதர்நெட் டூரனே
தாரகா சூரனுடல் தானிரு கூறாகவே
வைத்தவமு தளித்தவா முக்திகள் கொடுத்தவா
சாலோக சாமீப சாருப சாயுட்ச
சண்டப்பிர சண்டனே சாம்பிராணி வாசனே
அகிலகெம் பீரனே அகிலமுழு தாளுவாய்
செந்தூர்க் கதிபதி செங்கமல மேனியா
கற்பூர தீபம் எப்போதும் மேற்பவா
கானில்வரு வேடருடன் கூடியமர் செய்தவா
காசிக்கு நாயகா பூசிப்பதுன்னையே
கதிரமலை யையனே தெரிசனை எனக்கருளுவாய்
வரமது நல்குவாய் வடிவேற் கரத்தனே
தாபரித் தாளுவாய் தயாபரப் பொருளே
தரிதகுண திமிர் தமென நடனமிடு மயிலேறு
சரவண பவாயநம சாயலொளி பவாயநம
திரிபுர பவாயநம திகழொளி பவாயநம
பரிபுர பவாயநம பவனொளி பவாயநம
திருநீறு தந்தவா தெரிசனைகள் தந்தவா
தேவர்க்கு மேலான சிந்தையறி வானவா
எங்கள் துயர் தீர்ப்பவா ஏழ்மையைத் தவிர்ப்பவா
உருத்திராட்ச வாசகா உபாயங் கொடுத்தவா
குருடர்க்கு விழி கொடுக்குமயில் வாகனா
குன்றுதோ றுளவே நின்றுவிளை யாடுவாய்
சொரூப வானந்த வடிவே லனே
அரிகரியும் நீயே அருவுரும் நீயே
ஆழியின் மீது அமர்ந்தவன் நீயே
பலகலை யறிந்த பரம்பொருள் நீயே
நீயேயென் துயர்களை நீக்கியென் னாளும்
துன்பமணுகாமல் துரிதமாய் வந்து
காப்ப துனக்குக் கடன்கண்டாயே
கந்தவே ளுந்தன் கழலிணை சரணம் சரணம்.
ஓம் சரவணபவனே சரணம் சரணம்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமண்டூர் முருகன்
## திருப்பவள மணிமாலை

திருச்சிற்றம்பலம்.

துதி

வேழமுகத்து விநாயகனின் தாழ்பணிந்தால்
வராது இடர் பகை வல்பிணியும் - முற்பிறப்பில்
செய்த குறை தீரும் செல்வமுடன் கல்வியுமாம்
வெள்ளம் போல் பெருகுமே மேதினியில்

**சரஸ்வதி**

அன்னை கலையரசி அழகு தமிழ் சொல்லரசி
மன்னர் புகழ் சபையில் மட்டற்ற புலவனுக்கோர்
இன்னல் இடர் போக்கி இனிதுறவே நாவினிலே
வண்ணமுடன் வந்தமர் வாணி சரஸ்பதியே

மாலை

01. அப்பனே சரவணையில் உதித்த வேலா
அனுதினமும் உனைப்பணியக் கிருபை செய்வாய்
செப்பிடவே கலைவாணி எந்தன் நாவில்
தினமிருந்து நடம்புரிய வேண்டுமம்மா
கற்றறிவில்லாதடியேன் கவிதை தன்னைக்
காசினியோர் தன் கரத்தில் மிழிரவைப்பாய்
எப்பிளைகள் இருந்தாலும் பொறுத்தே ஆண்டு - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள் செய்வாயே

02 ஆதிசிவன் புத்திரனே அமரர் போற்றும்
ஐங்கரனுக்கிளையவனே வானோர் கோவே
கானின் மழை பெய்வது போல் அடியேனுக்கு
கவிதை மழை பொழியாதோ எந்நாளும்
மானீன்ற குறக்கொடியை மணக்கவெண்ணி
மாய்கையினால் பலவேசம் கொண்ட கோவே
ஏழையான் உனை நினைந்து பாடல் செப்ப - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 இரவுதனில் நான் தனியாய்ப் போகும்போது
என்மனதில் கனத்த பயம் வருகுதையோ
சலாரென்று சத்தமது கேட்டபோது
சண்முகனே உனக்கபையம் என்று சொல்ல
நிலையாக என் கால்கள் நிற்குதில்லை
நிமலே தடுமாறித் தவித்தேன் யானும்.
எதிரேறு சிவன் மகனே என்னைக்காக்க - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

04 ஈசலிட புற்றதனில் சற்பம் வாழும்
இரக்கமில்லா மனமதனில் பெறாமை வாழும்
சத்தியத்தின் தர்மநிலை தளைத்து வாழச்
சண்முகனே மானிடர்க்கு கிருபை செய்வாய்
நித்தியமும் பல தலங்கள் சுற்றிக் கொண்டு
நீறணிந்தேன் என் வினையை தீர்ப்பாய்யென்று
எத்தினமும் உனைப்பாடி ஏங்குகின்றேன் - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

05 உன்னை அன்றி ஒரு தெய்வம் காணேன் ஐயா
உலகு தனில் உன்புகழுக்கீடோ ஐயா
அன்னை தந்தை குருவெல்லாம் நீதானையா
அவலை என் மனக்குறையைத் தீருமையா
மன்னவனே மாளுதற்கு முன்னமாகில்
மகிழ்ச்சியுடன் சில காலம் வையுமையா
என்னென்று கேளாது இருப்பதேனோ - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

06 ஊழ்வினையோ விதிவசமோ பழிபாவத்தால்
உளன்றுவிட்டேன் இனி நானும் விழவே மாட்டேன்
பாழ்வயிற்றுக் கிரைதேடி ஓடி ஆடிப்
பகலிரவு உழைத்தாலும் ஒன்றுமில்லை
தேடாமல் ஓடாமல் நான் இருப்பதற்கு
என் செவிதனிலே ஓர் வசனம் கூறிவைத்தால்
ஏழ்மை நிலைபோக்குதற்கு இந்த நேரம் - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 என்றுமுனை மறவாத வரத்தைத் தாதா
இன்பசுக அன்புடைய மனத்தைத் தாதா
பண்ணு தமிழ் இசைபாட பாண்மை தாதா
பாசமெனும் ஆசை அற்ற வாழ்க்கை தாதா
உண்பதற்கு அன்னநற் கொமடையும் தாதா
ஓம் முருகா சரவணனே உன் உதவி தாதா
என்கடனே பணி செய்ய நினைத்தேனையா - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

08 ஏற்றமுடன் காவடியைத் தோளில் வைத்து
இருபுறமும் முதுகினிலே முள்ளும் தைத்து
பாட்டிசைத்து அடியார்கள் பின்னே செல்லக்
பாவிநான் காவடியைத் தோளில் வைத்து
ஓட்டமுடன் நானோடி வாறேனையா
உன்பதியில் ஆடிடவும் நாட்டம் கொண்டு
ஏட்டறிவு இல்லாத அடியேனுக்கு - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

09 ஐ ஐயோ இது வென்ன கொடுமை பாரும்
அவனி எல்லாம் புல்லில்லாத் தரைகளாச்சி
கால மது கெட்டுமே மழை இல்லாது
கடும் வெயில் தான் தரை தனிலே எரிக்குதே பார்
வானத்தை அண்ணாந்து நின்று பார்த்து
மழையிலையே என்றிடுவார் உன்னை எண்ணார்
ஏரிகள் பொங்கிடவே அருளே செய்ய - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

10 ஒன்றுமறியா மானிடராய்ப் பிறந்து வாழ்ந்து
உண்ணுவதும் உறங்குவதுமாகக் கொண்டு
நன்றெனைய மக்கள் மனை பந்த பாச
நட்டாற்றில் விழுவதனை அறிந்திடாது
நின்று மிகத் தரிக்காத மனித வாழ்க்கை
நிலை என நம்புகின்ற அடியேன் தன்னை
என்றுமுனை நினைக்க அருள்புரியுமையா - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 ஓம்மெனும் பிரணவத்தின் பொருளும் நீயே
ஓங்காரத்தத்துவத்தின் நிலையும் நீயே
ஆங்காரம் கொண்ட மகா சூரர் தம்மை
அழிக்க சிறுவேல் விடுத்த ஐயன் நீயே
பாங்காக அவ்வைக்கு பழமும் ஈந்த
பார்போற்றும் வடிவேற் குமரன் நீயே
ஏங்காத நாளில்லை உன்னைவேண்டி - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

12 ஔவெனும் அட்சரப்பொருளே வாவா
அமுத தமிழ் நெகுழும் திருக்கனியே வாவா
குமுத இதழ் வாய்யழகா குமரா வாவா
கொண்ணாடித் துதிக்க மால்மருகா வாவா
பதம் போற்றி பணியும்வேல் பழனி வாவா
பன்னிருகை ஆறுமுகா மயில் பறந்து வாவா
இதமான வேற்படையோய் ஏழை முன்னே - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

13 கந்தனே என்று நான் நொந்து பாடக்
கருணையது எந்தனர்க்கு தரவும் வேண்டும்
வந்ததுமே சரஸபதியு மெந்தன் நாவில்
வாலையது நிலைபெற்று இருக்க வேண்டும்
தொந்தி வயிற்றை ங்கரனும் உமையம்மையும்
தோடுடைய செவியன்விடை யேறியோனும்
எந்தனர்க்கு முன்னடக்க வேண்டுடமையா சுவாமி
எங்கள் குலத்தேசிகனைப் பாடுதற்கே

14 காசிபணம் என் கையில் சேரும் போது
கடுகளவு உன் நினைவு இல்லை ஐயா
தூசியது சுளல் காற்றில் சுற்றுமாப்போல்
சுற்றுகின்றேன் பலதெருவால் நாய்போலே தான்
பேசிடவும் அஞ்சுகின்றார் ஏழை என்று
பிதா தாயார் தாரமது வெறுக்கின்றார்கள்
ஏசிகிறார் எனைப்பழித்து என்னை செய்வேன் - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 கிழவி எனும் அவ்வைக்கு அன்றோர் நாளில்
கேட்டவரம் அத்தனையும் ஈந்தாயாம் நீ
ஏனப்பா எங்களுக்கும் கிட்டிடாதோ
இது தகுமோ இது முறையோ இதுவோநீதி
கூறப்பாயான் செய்த கொடுமை என்ன
குமரேசா உன் மனது கல்லோ தானோ
ஏனையா உன் நெஞ்சம் இரங்கொண்ணாதோ - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

16 கீரத்தியுடன் உனை நினைந்து பாடல் செப்ப
கிருபையுடன் அருகினிலே தாய்மாரோடு
வார்த்தை ஒன்று என்தனர்க்கு ஈந்தாயானால்
வடிலோ உந்தனையான் மறக்கமாட்டேன்
ஏற்றியே உனது புகழ் பாடி நிற்பேன்
இருள் துடைக்கும் வடிவேலா இன்பத் தேவா
எத்திசையும் உனது புகழ் விளங்குதையா - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

17 குடிப்பெருமை கூறிடுவார் மேலோரென்பார்
குறை சொல்லி அடுத்தவரைக் கெடுக்க வைப்பார்
படித்தறியா மூடரிடம் பணம்பறித்து
பகலினிலே உறங்கிடுவார் இரவில் தானும்
கறுத்த உடை ஆடையுடன் கடுமிருட்டில்
கள்ளனப் பேரெடுக்கார் மானம் போக
எடுத்து பொருள் பறிக்கின்றார் என்ன செய்வேன் சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

18 கூட்டத்தில் கூடி நான் பேசினாலும்
என் குறைகளைப் பலரிடத்தில் கூறினாலும்
கேட்டுமே கேளாதார் போலே சென்று
கிட்டியே அடித்திடவும் நினைக்கின்றார்கள்
காட்டியே கொடுக்கின்ற கயவர்கள் கூட்டம்
கண்காண அங்கும் இங்கும் திரியுதையோ
எத்தர்களின் அதர்மம் தனை அழிப்பதற்கு சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 கொர்வமது கொண்டு என் தந்தை தாய்க்கு
கெடுமதிகள் செய்தேனோ பழிபாவத்தால்
தடுமாறித் தயங்கி நான் திரியும் போது
தாரமோடு பிள்ளைகளும் வெறுக்கின்றார்கள்
விதிவசமோ நானறியேன் ஐயோ கந்தா
வேலவனே இக்காலக் கொடுமை தானோ
எதுவரினும் என்ன செய்வேன் வள்ளிவாழ்வே - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

20 கேட்டவரம் கொடுத்தருளும் கந்தா போற்றி
கேடு செய்தசூரர்களை வதைத்தாய் போற்றி
நாட்டினிலே சமநீதி நல்காய் போற்றி
நாத ஓங்கார வடிவேலாபோற்றி
ஏட்டினிலும் எழுத்தினிலும் ஏழை எந்தன்
இதயமதில் நல்லறிவாய் இருப்பாய்போற்றி
எதிரேறு சிவன்மகனே எம்மைக் காக்க - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

21 கைதனிலே அரைச்சல்லிக் காசுமில்லை
கடன்தருவார் எந்தனுக்கு ஒருவரில்லை
மெய்வருந்தி தொழில்கள் பல செய்திட்டாலும்
மேனியெல்லாம் ஓர்நோவாய் நோகுதையா
பால்சுரந்து கறவையது கன்றைத்தேடி
பலதிசையும் ஓடியது கதுறுமாப்போல
எத்தலமும் உனைத்தேடி ஏங்குகின்றேன் - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

22 கொக்கலகில் பட்டுவிட்ட மீனைப்போலே
குதிக்கின்றேன் துடிக்கின்றேன் நானோ ஐயா
பக்குவமாய் வெள்ளாமையைச் செய்கையாலே
பலவருடம் நட்டமே தான் பட்டேனையா
குக்கிருமல் கொண்டு உன்கோலம் காட்டி
குறமாதை அருகாக அணைத்த சீலா
எக்காலமும் உனைத் பணிவேன் மண்டூர்க்கந்தா சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 கோலமயில் உன்பக்கம் இருக்குதையா
குறமாது தெய்வானை அருகிருக்கார்
ஓம்மென்னும் அட்சரமும் கைதனிலே
ஒன்றுக்கும் அஞ்சாதே என்றிருக்க
வேலிருக்கு வெண்சேவல்கொடியிருக்கு
வேலவனே நீயிருக்கப் பயமுண்டோ
ஏதுக்கும் நானஞ்சேன் உன்னை அல்லால் சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

24 கௌவிடும் நாயதனைத் தருமர் தானும்
பலகாத வழிசுமக்கலையோ தலையில் வைத்து
நிலையில்லா உயிர்தன்னைக் கூட்டில் வைத்து
நின்பயணம் எப்போது முடியுமோதான்
அதற்கிடையில் எந்தனர்க்கு அருளுமீந்தால்
அய்யனே உந்தனர்க்கு தொண்டுசெய்வேன்
எதிர்ப்பேச நீ இல்லை என்ன செய்வேன் - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே

25 இக்கணமோ இப்பொழுதோ இரவில் தானோ
இருட்டினிலோ பகலினிலோ காட்டில் தானோ
ஆற்றினிலோ மடுவினிலோ கடலில் தானோ
அடியேன் நான் உன் பதியோ வீட்டில் தானோ
மரத்தாலோ விஷத்தாலோ இடியினாலோ
மருந்தாலோ மடையரது கையினாலோ
எவ்விடமோ என்னாவி போகும் முன்னே - சுவாமி
எங்கள் குலத்தேசிகனே அருள்செய்வாயே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமண்டூர் முருகன்

## பவளமணி மாலை

திருச்சிற்றம்பலம்

காப்பு

### நேரிசை வெண்பா

கார்விளங்கும் மண்டூர்க் கருதரிய வாலையத்துச்
சீர்வியங்கும் செல்வ வேலவனைப் போர்விளங்கச்
சொல்வார்க்கும் போற்றித் தொழுவார்க்குஞ் சூழ் துயர் போம்
சொல்வாக்குண்டாஞ் சிறந்து

1 பன்னிருகைத் திருவேலுஞ் சென்னியாறும்
பசியநவ மணிமுடியும் பவளவாயுந்
துன்னியநற் கிருபையுறு விழி யீராறுந்
துலங்கிய பொற்குண்டலங்களிலங்குங்காதும்
மன்னியமா மாணிக்கவடம் புரளும் மார்பும்
வரமளிக்க வருள் சொலிக்கும் மண்டூர் வாழும்
வன்னமயில் வாகனனே யடியேன் கொண்ட - சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவே லோனே

2 பாங்கியர்கள்ஆல வட்டங்கவரி யேந்தப்
பலவரிசை செய்துலகோர் பணியுந் தாழும்
கோங்கு மல்லி யிருவாட்சி கடம்பு கொன்றை
குலவிய நல்லார மசைந்தி லங்கு மார்பா
மாங்கனிக்கு யீரேழுலகை நொடிக்கு முன்னே
வலமாக வந்த கந்தா மண்டூர்வாழும்
வாங்கு நவ ரெத்தினமே யடியேன் கொண்ட - சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 பிஞ்ஞகன்றன் திருக்குமரா வானோர் தேவா
பெருமாளின் திருமருகா கிருபைநாதா
அஞ்சலமெனுமடியவர்களுக்கு வருளே செய்து
அன்னை தந்தை யாயிருக்கும் மாதி தேவா
மஞ்சாருங் குழல் மடவார் வள்ளிதன்னைச்
வனமீது வதுவைசெய்தாய் மண்டூர் வாழும்
வஞ்சமிலா நெஞ்சோனே யடியேன் கொண்ட - சுவாமி
மனக்கவலை தீர்திடுவாய் வடிவேலோனே

4 பீலிமுடி யோனளித்து முக்கண் ஞானப்
பெருமானுக் கிளையபே ரின்பத்தோனே
ஞாலமதி லுன் கிருபைக் கிணைவேறுண்டோ
நான்முகனைச் சிறையில் வைத்த நாத வேதா
ஆலமுறு விழிமடவா வலையிற் சிக்கி
அலைந்துலைந்து அறிவிழந்தேன் மண்டூர் வாழும்
வாலிதனைக்கொன்றமால் மருகா வென்றன் - சுவாமி
மனக்கவலை தீர்திடுவாய் வடிவேலோனே

5 புண்ணியனே நின்கழலைத் தினமும் போற்றாப்
பொற்பறிவி லாதவிலங்கினம தானேன்
தண்ணொளி யிலாத தறுவ ணாளனானேன்
தருமகுண மில்லாத கயவ னானேன்
மண்மீது லவதரித்துத் துயரமென்னும்
மாநதியில் மூழ்கின்றேன் மண்டூர்வாழும்
வண்ணமுறு கண்ணியனேயடியேன் கொண்ட - சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

6 பூதவெள்ள மிருபுடையுஞ் சூழ வீரர்
போற்றிசெயவாவெனவே புஷ்பந் தூவ
மாதவனும் நான்முகனும் மற்றுந்தேவர்
வானவரும் மறைகள் சொல்லி மருகே செல்ல
வேதமுறை யறியாத வசுரர் தம்மை
வோறவே களைத்தோனே மண்டூர் வாழும்
மாதுவள்ளி மணவாளா வடியேன் கொண்ட - சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 பெருமானே யருளாளா கிருபை தாதா
பேரின்ப வீட்டுக்கு வழியைத் தாதா
ஒருநாளு முனைமறவா தன்பைத் தாதா
ஓங்காரத் துட்பொருளை யுணர்த்த வாவா
மருமாது வள்ளிதனை வனமீதப்போ
வதுமை செய்தாய் குகநாதா மண்டூர் வாழும்
வருவினைகள் தீர்ப்போனே யடியேன் கொண்ட சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

8 பேசரிய சொறிகரப்பான் குட்டங் கண்ணோய்
பெருநோயோ டிருமல்வலி யீழை வாய்வு
நாசமுறு பறங்கிமண்டைக் குத்துக் கட்டு
நடுங்கு சன்னி வாதமொடு மாந்தம் மற்றும்
மாசற்ற கலைமதிபோல் நின்பேர் சொன்னால்
மாறியஞ்சி யோடுமையா மண்டூர் வாழும்
வாசமலர்ப் புயத்தோனேயடியேன் கொண்ட - சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

9 பையரவு பிறையதனை யணிந்தோன் மைந்தா
பார்ப்பதியின் திருப்புதல்வா பழனிவேலா
வையமதி லுன்கிருபைக் கிணைவே றுண்டோ
வானவரைச் சிறைமீட்ட வடிவேல் நாதா
கையிலுறு கூர்வேலுந் திரண்ட தோளுங்
கனகமணி முடியினோடும் மண்டூர் வாழும்
மையல்மிகு மிக்குளனே யடியேன் கொண்ட சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

10 பொன்போலுங் குணமுடையாள் கார்த்திகைக்குப்
புத்திரனாய்ப் பாலமிர்தம் புசித்தாயின்னுங்
கன்னல் மிகச் சரவணையில் வாழ்ந்தாய் சிலநாள்
காட்டகத்தில் மரமாகி நின்றாய் மற்றும்
மன்னுகுற மங்கையர்க்காய் முன்னோன்றன்னை
வனத்தில் வரவழைத்தவனே மண்டூர் வாழும்
மன்னவர்க்கு மன்னவனே யடியேன் கொண்ட சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 போர்த்தனிலே மாற்றலரைச் சாம்பலாக்கும்
புங்கவனே கங்கைமைந்தா புனிதவேதா
ஆரறிவா ருன்சூட்சுமத்தைஐயா மெய்யா
அடியாருக் கெளியோனே முடியாறோனே
வாரணிந்த கலசமுமலை தெய்வயானை
மணவாளா குணலோலா மண்டூர் வாழும்
தாரிலங்கு மார்போனே யடியேன் கொண்ட சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

12 பௌவுநீர் சூழ்புவியி லுனை த்துதித்தால்
பலத்தநவக் கிரவினை பறக்கவேணும்
ஔவிய விருவினையு மகலவேணும்
அனுதினமும் உனது புகழைப்பாட வேணும்
மௌவியமா மலரடியிற் சேரவேணும்
வளர்ஞானந் தரவேணும் மண்டூர் வாழும்
பௌவுசற்ப மணிபுனைந்தே யடியேன் கொண்ட சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

13 இப்பொழுதே தற்பரனே யெழுந்து வாவா
ஏகவொளி யானவனேயோடி வாவா
சொப்பரிய ரெத்தினமே துதித்தேன் வாவா
செழுங்குன்றின் நடம்புரிந்த தேவே வாவா
அப்பனே யுனையன்றி யார்தான் தஞ்சம்
ஆறுமுகந் தகதகென மண்டூர் வாழும்
மைப்பொலியும் வள்ளிபங்கா வடியோன் கொண்ட சுவாமி
மனக்கவலை தீர்த்திடுவாய் வடிவேலோனே

சுபம்

மண்டூர் வடிவேலர் தோத்திர மாலை

அமரர் திரு. ஏகாம்பரம் கந்தையா
அவர்கள் இயற்றியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமண்டூர் முருகன்

## திருப் பவளமணி மாலை

திருச்சிற்றம்பலம்

காப்பு

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம்பவலன்
ஞான குருவாணி பதம் நாடு

நூல்

1 கங்கை திங்கள் தனிச் சடையில் அணிந்து அண்டர்
கவலை எல்லாம் தீர்த்துனது கருத்திலுன்னி
மங்கை உமை சிவ பாலன் சரவணையில்
வந்துதித்த வடிவேலும் கையிலேந்தி
சிங்க முகன் முதலான சூரர் தம்மை
செருக்களத்தில் மடிந்துறவே சிறைமீட்டாய்
தங்கு தமிழ் நின்றிலங்கு மண்டூர் வாழும் - சுவாமி
சண்முகனே எனதுயர் மாற்றுவாயே

2 காவடியைத் தோளில் வைத்து செடிலுங்குத்தி
காவிகட்டி வாயலகு கடிதாய்ப்போட்டு
பாவடியார் கவிபாடி தீபமேற்றி
பண்புவினை தீருமென்று படியாய் உந்தன்
சேவடியை மனதிலுன்னி வந்த பேர்க்கு
தீவினையை மாற்றி ஈடேற வைப்பாய்
மாவடியார் கவரியிட மண்டூர்க்கந்தா - சுவாமி
வடிவேலா எனதுயர் மாற்றுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 கிரணமொடு தரமெழுகு மேளதாளம்
கீதமொடு நாத மெழ வேதமோத
தருணமது வள்ளி தெய்வானையோடு
சங்கரனும் ஐங்கரனும் கண்டுபோற்ற
கருணைதா வென்றடியார் நின்று போற்ற
காவடிகள் இருபுறமும் ஆடல் செய்ய
மரண நோய்துயரகல மண்டூர்கந்தா சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

4 கிரிகண்ட பாம்பானேன் பூனைவாயில்
கிட்டியதோர் எலியானேன் பாவியானேன்
ஊரிலுள்ளோர் இகழ்வதற்கு வலியனானேன்
ஓடமுறு பாய்மரத்துக்காக மானேன்
கூரியதோர் சரமிழந்த வேடனானேன்
கொடியதொரு வேங்கை கண்ட பசுவுமானேன்
வாரியழகாய் விளங்கும் மண்டூர்க் கந்தா சுவாமி
வடிவேலா எனதுயர் மாற்றுவாயே

5 குட்டாமல் அடியாமல் இகழ்ந்து பேசி
கொடியவரின் சதிவலையில் குறுகா வண்ணம்
கட்டாயம் வந்தென்னைக் காக்க வேணும்
கங்கைமைந்தா உன்தன் திருப்பாதம் காண
எட்டாதோ இச்சனமோ எனக்கேயையா
ஏழை என்று உன் மனது இரங்கொண்ணாதோ
வட்டமது பூத்திலங்கும் மண்டூர்க்கந்தா சுவாமி
வடிவேலா எனதுயர் மாற்றுவாயே

6 கூவுமிசை தனக்கு வனக்குயிலே என்பார்
குன்றரிசி புரிவதற்கு குகனே என்பார்
ஏவுகின்ற சரத்திற்கு வேல்தான் என்பார்
எளியோன் றெனை இகழ்ந்தார் இல்லை என்பார்
பாவினுக்கு அவ்வை என்பார் சத்துருவின்
பழிவாங்கும் ராமரென்பார் பகைத்ததென்பார்
வாவிகள்தான் சூழ்திலங்கும் மண்டூர்க் கந்தா - சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 கெடுமதியோ எனது முன்வினைகள் தானோ
கிரகநவமொரு முகமாய்ப் பகைத்ததோ தான்
படுநோய்கள் வல்வினைகள் வந்து என்னைக்
பரிகாசம் பண்ணுவதைப் பார்க்கலாமோ
நெடுமாலின் மருகோனே கங்கை மைந்தா
நீயல்லால் வேறு தெய்வமுலகில் காணேன்
மடுவாவி சூழ்திலங்கும் மண்டூர்க்கந்தா - சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

8 கேசவர்க்கு மருகோனே கங்கை மைந்தா
கிளிமொழியாள் வள்ளி தெய்வானை பங்கா
நேசமது வையுமையா எந்தன் மீது
நெஞ்சிரத்தம் கொதிப்பதற்கு அருளைத் தாரும்
பாசமது கொண்டியமன் அணுகாவண்ணம்
பாதுகார் பன்னிரண்டு கையாலென்னை
வாசமது கமழ்திலங்கும் மண்டூர்க்கந்தா சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

9 கையிரண்டும் கூப்பி உன்பாதம் காண
கருத்திலுன்னி முனிவர்களும் சடைவளர்த்து
பொய்யுடலைத் தஞ்சம் என்று மனதிலெண்ணி
சிவபுராணபயன் ஜெபங்கள் புரியக்கண்டு
மெய்யுடனே ஆறுமுக ரூபங்காட்டி
வேலவனே வந்தெனக்கு விடைகள் தாரும்
வையகத்தில் உனைப்பணிந்தேன் மண்டூர்க்கந்தா - சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

10 கொடுக்காமல் எடுக்காமல் குறைகேளாமல்
கோதையர்கள் மையலிலே மனம் போகாமல்
அடுக்காறு பேசாமல் அன்னை தந்தை
அவமதிகுள் ஆக்காமல் வேறணி சேராமல்
விடுக்காமல் வீணரொடு மிக நாடாமல்
மெய் எழுத்து நெஞ்சை விட்டு வீண்போகாமல்
வடுவேதும் இல்லாத மண்டூர்க்கந்தா சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 கோள்கள் எனும் நவக்கிரகம் பகைகாவண்ணம்
குமரேசா அடியேனைக்காருமையா
தேன் பூரான் சிலந்திவண்டு புற்றுநாகம்
சிற்றெலியும் அரணை முதல் குளவி நாயும்
ஆள்ளரவம் புலிகரடி பன்றி மாடும்
ஆறுமுகா உன் நாமம் கேட் டகலப் போமே
வாழ்வளித்து மலர் சூடும் மண்டூர்க் கந்தா - சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

12 கெளவுகின்ற முதலை தன் வாயிற் பட்ட
கருதுமுயிர் போலானேன் ஆமையானேன்
ஔவியமாய் பேசுகின்ற அனாதைபோலும்
அடை மழையில் நனைந்திருக்கும் கிளிபோலானேன்
மௌவியமாய் மலரடியை மறவாதேற்றி
வந்தனை செய்யும் எந்தனர்க்கு வரமேநல்காய்
சௌவியமாய் தாழ்பணிந்தேன் மண்டூர்க் கந்தா சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

13 இக்கணமே எழுகின்ற கதிரவன் போல்
எதிர் வந்து தன்னொளியை காட்டொண்ணாதோ
கொக்கரித்து எதிர்வந்த சூரர் தம்மை இரு
கூறாக வேல்கொண்டு அழித்த சீலா
எக்காலமும் உனைப்பணியும் அடியார்தங்கள்
இதயமெனும் கமலத்தில் புகுந்தறி வைத்தாராய்
மங்காது அருள் சொரியும் மண்டூர் கந்தா சுவாமி
வடிவேலா எனது துயர் மாற்றுவாயே

சுபம்



தொண்டன்
**சி. சிவலிங்கம் ஐயா**
இயற்றியது
மண்டூர் வடிவேல்
முருகன் பாமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தில்லை மண்டூர் முருகன் திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

**தன தன தான தனன தனதான - தனதான**

தரணியில்மாந்தர் ஆசை எனும் பெரு மயலாலே
சஞ்சல முற்று நாளும் மலைவதும் - தகுமோதான்
கரையிலா வான தயாபரா நீயும் களிகூர்ந்து
கஞ்ச மலர்பதம் நெஞ்சினி வைத்தெனை - யாழ்வாயே
பரையெனு முமையை வதுவை செய்தருளிய - அமலேசன்
பரிவுடன் அருளிய அறுமுக குருபர - கதிர் வேலா
திரையென வந்தெடு தீவினை தீர்க்கவே - படி மீது
தில்லை மண்டூரில் திருவுடன் மேவிய - பெருமாளே

**தன னத் தனன தன தன தான**

நவரெத்தினமே கதிரைப் பெருவாழ்வே
நாடிய தொண்டர்க்கு - அருள்வாயே
பவக்கடல் நீந்த - அடியேனும்
பக்குவமடைவேனோ - முருகோனே
சிவ சுத கந்த - குகவேலா
தின முனைப்பாட - அருள்தாராய்
தெய்வசுர்களை வென்ற - கதிர்காமா
திருவுறை மண்டூர்ப் - பெருமாளே

**தந்தன தனன தான தனதான**

வஞ்சனையால் மாந்தர் - மயலாலே
வருந்திடா அனுதின - மலையாதே
சஞ்மென் றுனை நாடும் - அடியேன்
தாபரித்தாழ்வாய் நற் - கதிர் வேலா
குஞ்சர முகன் றனக்கு - இளையோனே
கும்பிடுமடியார்க்கு - கெளியோனே
மஞ்ஞையிலேறிவந் - தெனையாள்வாய்
மண்டூர்ப்பதிவாழும் - பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம், கல்முனை.0770643990

விலை. 70/=